1979 பிப்ரவரி 22]

மணல்மேடு பேரூராட்சி.

*வினா எண். 127—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா -

(அ) மாயூரம் ஒன்றியம் மணல்மேடு பேரூராட்சியில் நிர்வாக அதிகாரி மீது பேரூராட்சி மன்றத்தினர் புகார் மனுக்கள் எவையேனும் அனுப்பியுள்ளனரா ?

(ஆ) ஆம் எனில் அரசு அது பற்றி மேற் கண்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ)—(ஆ) புகார்கள் ஆதாரமற்றவை என்றும் பொறுப்புத் தலைவரும், நிர்வாக அலுவலரும், கருத்து வேறுபாடின்றி நிர்வாகத்தை சரிவர நடத்துவதாக உறுதி கூறி எழுதிக் கொடுத்ததால் மேல் நடவடிக்கை கைவிடப்பட்டது என்று கோட்ட வளர்ச்சி அலுவலர் தெரிவித்துள்ளார்.

திரு. என். கிட்டப்பா : மணல் மேடு பேரூராட்சி பொறுப்பு உறுப்பினரும், தலைவரும், ஏனைய மன்ற உறுப்பினர்களும், எனக்கு அந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் தந்த தகவலின் அடிப்படையில் தான் இந்தக் கேள்வி எழுப்பப் பட்டுள்ளது. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்படி அறிவிக்கிறார்கள். என்றாலும் இத்தகைய முறைகேடு இனி தொடர்ந்து நடைபெறாமல் பாதுகாப்பதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே அந்த புகார்களே ஆதாரம் அற்றவை என்று தகவல் கிடைத்து இருக்கிறது. அத்தோடு பொறுப்புத் தலைவரும், நிர்வாக அலுவலரும் ஒற்றுமையாக செயல்படுவதாகவும் உறுதி கூறி எழுதிக்கொடுத்ததால் மேல் நடவடிக்கை கைவிடப்பட்டது என்று கோட்ட வளர்ச்சி அலுவலர் தெரிவித்துள்ளார்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பொறுப்புத் தலைவரும் நிர்வாக அதிகாரி அவர்களும் ஒற்றுமையாக பணியாற்றுவதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை கிடையாது. என்றாலும், அந்த முறை இல்லை என்றுதான் ஆளும் கட்சி உறுப்பி

னரும் கூட, தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என்னிடம் உரைத்தார்கள். இனியாயினும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே சிக்கல் ஏற்கனவே தீர்ந்து விட்டது. இனிமேல் ஒன்றும் இல்லை.

* வினா எண். 87—திரு. துரைமுருகன் :—மாண்புமிகு தொழிலாளர் நலத்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னையாற்றிலிருந்து சோளிங்கர் நகரத்திற்கு குடிநீர் எடுத்துச் செல்லப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், வழியில் உள்ள தீயார்குப்பம், கீரைச் சாத்து, மிளகாய் குப்பம் ஆகிய கிராமங்களுக்கு அந்த குழாய்களிலிருந்து நீர் வழங்கும் திட்டம் அரசுக்கு உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) இல்லை,

(இ) இவ்வினா எழ இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 88, 89 ஒன்றாக எடுக்கப்படும்.

இடவசதி கட்டுப்பாடிட்ன் கீழ் உள்ள வீடுகள்

* வினா எண். 88—திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு தொழிலாளர்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் எத்தனை வீடுகள் Accommodation Control-ல் இருந்து நடப்பாண்டில் விடுவிக்கப்பட்டிருக்கிறது

(ஆ) சென்னை நகரில் Accommodation Control-ல் எத்தனை வீடுகள் தற்போது உள்ளன ?